# பெரும்பாணாற்றுப்படையில் நிலவியல் பண்பாடு

***செல்வி ஹரினிதா .சி***
தமிழ்த்துறை
பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383112

***ஆய்வுச்சுருக்கம்***

*வாழ்வு குறித்த நெறியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் பங்குபெறும் தனிமனிதர் பலரின் கூட்டமைப்பே சமூகம் எனலாம். சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களம். "சமூகம் என்பது சமூக உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள வலைப் பின்னல்!" என்று மென்ஈவர், பேசு என்பவர்கள் குறிப்பிடுகின்றனர். எல்லா உயிர்களும் பிற உயிர்களைச் சார்ந்து வாழ்வதுபோல, மனிதனும் பிற உயிர்களைச் சார்ந்து வாழ்தலைப் பண்பாகக் கொண்டுள்ளான். பிறரோடு பேசி, பழகி, பகைத்து, கண்டு, கேட்டு, உறவு கொண்டு என பலவற்றைக் கற்றுத் தேற சமூகப்பழக்கம் தேவையாக உள்ளது.*

*இரால்ப் லிண்டன் என்பவர், "சமூகம் என்பது உயிர் வாழ்வதற்காகப் போராடும் நம் மக்களினத்தின் தனித் தன்மையுள்ள ஒரு குழுவாகும். தமக்குத் தாமே அமைத்துக் கொண்ட அக்குழுவின் தலைவிதியையே அக்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு தனிமனிதனும் பெற்றிருக்கிறான். இவ்வமைப்பில் குழந்தைமையிலிருந்து முதுமை வரையில் மனிதர்கள் மற்றவரைச் சார்ந்தும், மற்றவரின் கூட்டுறவோடும் வாழ வேண்டியுள்ளவர் களாயுள்ளனர்" என்று சமூகம் என்ற பதத்திற்கு விளக்கம் தருகிறார்.*

*சமூகங்கள் தோன்றுதலும், வளர்தலும் அழிதலுமான செயல்கள் வரலாற்றில் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கின்றன. சமூகத்தின் வளர்ச்சிக்கும் தேய்வுக்கும் அதன் உறுப்பினர்களே காரணமாவர். தனிமனிதன் ஒவ்வொருவனும் தான் சார்ந்த சமூகத்திற்குத் தன் பங்களிப்பைச் சரியாகச் செய்யும்போது சமூகம் வளர்ச்சியடைகிறது. உணவு, உடை, உறையுள் இம்மூன்றனுக்காகவே மக்கள் உழைக்கின்றனர்.*

*மேற்குறிப்பிட்ட சமூகம் சார்ந்த செய்திகளின் அடிப்படையில் சூழலியல், நிலவியல் சார்ந்த இலக்கியப் பதிவுகள் தனித்த ஆய்வுக்குரியன. ஐவகை நிலங்களின் இயல்பு, மக்களின் உணவு, உறைவிடம், பழக்கவழக்கம், பண்பாடு, உயிரினங்கள், தாவரங்கள் பற்றிய விவரிப்புகள் நிலவியல் நோக்கில் இன்றியமையாதவை. நிலமும் நிலம் சார்ந்த பொழுதும் ஒருவகையில் மக்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கிறது என்பதை இதன் மூலம் உணர முடிகிறது. "மலைகள், ஆறுகள் போன்ற இயற்கை அமைப்புகள் மிகத் தெளிவாக எல்லை வகுக்கும் தென்னிந்திய நிலத்தோற்றத்தின் பௌதிக அமைப்பு, தென்னிந்தியாவின் சிறிய அரசுகள், இன்னும் சிறிய குறுநிலத் தலைவர்கள் ஆண்ட சிறு பகுதிகள் ஆகியவற்றிற்கு இடம் தந்தது" (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும். ப. 3) என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில் பெரும்பாணாற்றுப்படையில் இடம் பெற்றுள்ள நிலவியல் சார்ந்த செய்திகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**பெரும்பாணாற்றுப்படை**

*பத்துப்பாட்டுக்களில் நான்காவதான பெரும் பாணாற்றுப்படை, தொண்டைமான் இளந்திரையனைக்*

கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது ஆகும். இசைவாணர்களை அக்காலத்தில் பாணர் என்றழைத்தனர். பாணரது குடும்பத்திலுள்ள அனைவரும் இசைத்தமிழை வளர்ப்பதில் இன்பம் கண்டனர். பேரியாழ் மீட்டுபவன் பெரும்பாணன் ஆவான். பெரும் பாணன் தொண்டைமானிடம் செல்லும் போது, அவன் தன் யாழை இடப்பக்கத் தோளில் மாட்டிக்கொண்டு செல்கிறான். பெரும்பாணனின் பயணத்தில் அவன் சென்ற ஊர்களையும் அங்குள்ள மக்களின் வாழ்வியலையும் பெரும் பாணாற்றுப்படை வருணனை செய்கிறது. அத்துடன், நிலவியல் சார்ந்த காட்சிகளை, காட்சித் தொகுப்பினை நுணுக்கமாகப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளது. பயணம் மேற்கொள்ளும் பாணன் தான் செல்லும் இடங்களில் எல்லாம் தனக்குரிய நிலவெளிகளை தற்காலிக / நீண்ட கால நிலவெளியாக எண்ணிக் கொள்கிறான். இது புதிய பண்பாட்டு வெளியை பாணனுக்கு அறிமுகப்படுத்துகிறது. “இல்லம் என்னும் நிரந்தர அடிப்படைப் பண்பாட்டு வெளியைப் போலவே, இல்லங்களால் உருவாக்கப்படும் தெருக்கள், தெருக்களால் உருவாக்கப்படும் ஊர் அல்லது நகரம், ஊர் மற்றும் நகரங்களைக் கொண்ட மாநிலம், மாநிலங்களின் தொகுதியான நாடு என ஒவ்வொன்றும் பண்பாட்டு வெளிகளாக மாறுகின்றன. நிரந்தரமான நிலவெளிகள், நிரந்தரமான பண்பாட்டு வெளிகளை உருவாக்கும்” (https://ramasamy writings. blogspot. com/2015/03/ blog & post24. html) என்ற அ.ராமசாமி அவர்களின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

### உணவும் விருந்தோம்பலும்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு, உடை, உறையுள் இன்றியமையாத தாகும். “உணவெனப் படுவது நிலத்தொடு நீரே” (புறம். 143) என்பர். இந்தப் புரிதல் நுட்பமானதும் வியப்புக்குரியதும் ஆகும். ஒவ்வொரு உணவினுடையக் கூறும், நிலத்தையும் நீரையும் சார்ந்திருக்கிறது என்ற புரிதல் சங்க இலக்கிய காலத்திலேயே தமிழர்களிடம் இருந்திருக்கிறது. மேலும் உண்ணுதல் என்பது ஓர் உடல் சார்ந்த தேவையாக இல்லாமல் சமூகம் சார்ந்த செயலாகவே சங்ககாலத்தில் நோக்கப்பட்டி ருக்கின்றது. அதாவது, நிலத்திற்கு நிலம் உணவுகள் வேறுபடுவது சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. அக்காலத்தில் விருந்தினருக்கு உணவு படைப்பதற்குக் கொடுக்கப்பட்ட முதன்மையும், குடும்பம் மற்றும் ஊர் சார்ந்த நிகழ்வுகளில் உணவு பெற்றிருந்த சிறப்பும், உணவின் சமூகச் சார்பைப் புலப்படுத்துகின்றன. மேலும் மனிதன் உயிர் வாழ்வதற்கான உணவைக் கொடுப்பது மிகவும் போற்றுதலுக் குரியதாகப் பார்க்கப்பட்டது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (புறம். 18) என்னும் வரிகள் எடுத்துக்கூறுகிறது.

பண்டைத் தமிழர்கள் சுவை மிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ப உணவு வேறுபட்டது. அவரவரின் பொருளாதார நிலைமையை ஒட்டியும் உணவில் தரம் வேறுபட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. மரக்கறி உணவோடு புலால் உணவும் பெரிதும் விரும்பி உண்ணப்பட்டது. மன்னர்கள் இரவலர் அளித்த விருந்துகளில் புலால் உணவே பரிமாறப்பட்டது என அறிகிறோம் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.121) என்ற அ.தட்சிணாமூர்த்தி அவர்களின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

பெரும்பாணாற்றுப்படையில் “எயிற்றியர்” எறும்புப் புற்றைப் பாறையாற் குத்திக் கிளறி அங்கு எறும்பு சேர்த்து வைத்த புல்லரிசியை உண்ணுதலை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இச்சத்தான உணவு கிடைத்தவுடன் முகம் மலர்வதை “வெண்பல் எயிற்றியர்” என்ற தொடரில் வாயிலாக அறியமுடிகிறது. எயிற்றியர் தாம் சமைத்த சோற்றோடு, உப்புக்கண்டமும் சேர்த்துத் தெய்வத்திற்குப் படையல் போடுவது போலத் தேக்கிலையில் கலைஞர்களுக்கு உணவளித்தனர் என்பதை,

***"நீழல் முன்றில் நிலஉரல் பெய்து***

***...............................................***

***தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ, நும்***

***பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவீர்"***

***(பெரும். 96 -105)***

*எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் உணர்த்துகின்றன. முல்லை நிலத்தில் உழுது உண்பாரது ஊர்களில், தொழுக்கள் நிறைந்த பகுதியில், சிறு பூளைப்பூ போன்ற அவரை விதைப் பருப்புடன் கலந்த முரலை வழங்கியுள்ளனர் என்ற செய்தி இடம் பெறுகிறது.*

*ஆமுர் நகரில் வாழும் உழவரின் தங்கை அமலை வெண் சோற்றினை, நண்டினது கலவையோடு சமைத்து உண்ணக் கொடுத்துள்ளனர் என்பதை,*

***"தச்சச் சிறாஅர் நச்சம் புனைந்த"***

***(பெரும். 248)***

***"மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்"***

***(பெரும். 256)***

*எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் கூறுகின்றன.*

*தோப்புக்குடி உழவர் மலைகளில், பலாப் பழத்தையும், தெங்கின் இளநீரையும், வாழைப் பழத்தையும், பனையின் நுங்கையும், பிற இனிய பண்டங்களையும், வள்ளிக் கிழங்குகளையும் உண்ணக் கொடுத்துள்ளனர். உழவர்களின் இல்லங்களில் தங்குபவருக்கு வெள்ளை நெல் சோற்றை வீட்டிலுள்ள கோழிக்கறிப் பொரியலுடன் வழங்கியுள்ளனர். கரும் பாலைகளில் கரும்புச்சாறும், வெல்லக் கட்டியும் கொடுத்து மகிழ்ந்துள்ளனர்.*

*வலைஞர் குடியிருப்பில் தங்குபவர்களுக்கு இருநாள் புளிக்க வைத்த கொழியலரிசிக் (நன்றாகக் குத்தித்தீட்டப்படாத அரிசி) கூழை மீன் சூட்டோடு பெற்றனர் என்பதை,*

***"அவையா அரிசி அம்களித் துழவை***

***...............................................***

***தண் மீன் குட்டொடு, தளர்தலும் பெறுகுவிர்"***

***(பெரும். 275 - 282)***

*எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியலாம்.*

**உடை**

*பெரும்பாணாற்றுப்படையில் இடையர்கள் காடு மேடுகளில் திரிய வேண்டியிருப்பதால் எப்பொழுதும் தொடுதோல் (செருப்பு) அணிந்தவராய், வடுபட்ட கோலை ஊன்றிய கையினராய் இருந்துள்ளனர். அழகான மலர்களை மாலையாக அணிந்து ஒரே ஆடை மட்டும் அணிந்தவராகக் காணப்பட்டனர் என்பதை,*

***"தொடுதோல் மரீஇய வடு ஆழ் நோன்அடி***

***ஒன்று அமர் உடுக்கை கூழ் ஆர் இடையன்"***

***(பெரும். 169 - 170)***

*எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் விளக்குகின்றன. மேலும் பாலாவியை ஒத்த நூலாற் செய்த கலிங்கத்தை வழங்கினான் என்பதை,*

***"ஆவி யன்ன அவர் நூற் கலிங்கம்"***

***(பெரும். 469)***

*என்ற வரிகளால் அறியலாம்.*

**உறையுள்**

*உயர்திணையாயினும் அஃறிணையாயினும் உறையுள் கட்டாயமாகிறது. ஆற்றுப்படையில் சுட்டப்படும் மக்கள் தங்கள் நில அமைப்புகளுக்கு ஏற்பவும், வாழும் சூழல்களுக்கு ஏற்பவும் தமக்கு உறைவிடம் அமைத்துக் கொண்டனர் என்பதை ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டுகின்றன.*

*பெரும்பாணாற்றுப்படையில் கோவலர் குடியிருப்புகளில் ஆடுகளின் உணவாகிய தழைகளைக் கட்டி வைத்த குடிலும், மூங்கிலால் செறிக்கப்பட்ட கதவுகளும், வரகு, வைக்கோற் கற்றை முதலியவற்றால் வேயப்பட்டதுமாக செய்தி சுட்டப்படுகிறது. குறிஞ்சி நில மக்களது குடியிருப்புகளில் துணையை இழந்த கலைமான் வருத்தத்துடன் துணைமானை அழைக்கும் தன்மையும், மரை ஏறு ஒடுகின்ற காட்டையும் உடையதாகச் சுட்டப்படுகிறது.*

*முல்லை நில மக்களது இல்லங்கள் தேய்ந்த சுவரையும், கார்காலத்து முகில்கள் போன்று வரகு வைக்கோலால் வேயப்பட்ட கூரையை உடையதாயும் விளங்கியுள்ளது.*

தோப்புக்குடிகளை உடைய உழவர் குடியிருப்பு தென்னையின் வாடிய மடலால் வேயப்பட்டதாய் மணம் கமழ்கின்ற பூந்தோட்டங்கள் நிறைந்ததுமாகக் காணப்பட்டுள்ளது. வலைஞரின் குடியிருப்பு தருப்பைப் புல்லால் வேயப்பட்ட குடிலையும், புன்னைக்காய்கள் தொங்குகின்ற பந்தரும் உடையதாய் இருந்துள்ளது.

எயிற்றியர் குடிசை, அணிலும் எலியும் திரியாதபடி முள் போன்ற ஈந்தின் இலையால் வேயப்பட்டதும், முதுகில் முட்கள் குத்திட்டு நிற்கும் முள்ளம்பன்றி, புல்லின் கூரிய நுனிகள் வேயப்பட்ட தன்மை உடையதாய் இருந்தது என்பதை,

> **"நீள் அரை இலவத்து அலங்குசினை பயந்த**
> ............ .............
> **ஈத்து இலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை"**
> (பெரும். 83 - 88)

எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் விளக்குகிறது.

எயினரது அரணில் ஊண் திண்பதற்காக, பருந்துகள் தங்கும் வீடுகள் காணப்பட்டுள்ளது. பகைவரை அழித்ததால் முனை மழுங்கிய புலால் நாறும் வாயையுடைய வேல்கள், கேடயங்கள் முதலான படைக் கருவிகள் தொங்கவிடப்பட்ட வீடுகள் அமைந்த நகரமும் இருந்துள்ளது. அந்நகரின் அருகேயுள்ள வீடுகள் புல்லால் வேயப்பட்ட மதிலும், காவலுக்காக நாய்கள் பிணிக்கப்பட்ட வீடுகளையும் கணை மரத்தாலான கதவினையும் உடையதாகக் காணப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பெரும்பாணன் தனது பயணக்காலத்தில் வெவ்வேறு இடங்களைத் தமது தற்காலிகமான நிலவெளிகளாக ஏற்றுக் கொள்கிறான். இது அவனுடைய பயண இலக்கியப் பதிவுகளிலும் எதிரொலிக்கிறது. செல்லும் வழியில் அவன் சந்திக்கும் இது போன்ற தற்காலிக நிலவியல் பண்பாடும் அது சார்ந்த செய்திகளும் விரிவான ஆய்வுக்கு உரியன. இவை போன்ற சமூக, பண்பாட்டுச் சித்திரிப்புகள் ஆற்றுப்படை இலக்கியத்தின் அடிப்படையாக அமைவது மட்டுமின்றி ஊர், நகரம், மாநிலம் என்ற எல்லை கடந்து ஒன்றியம், நாடு என்ற கருத்துருவாக்கம் உருவாகவும் முழுமை பெறவும் காரணியாக அமைகின்றன. இவை அனைத்திற்கும் நிலவியல் பண்பாடே அடிப்படைக் காரணமாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.

**துணை நூற்பட்டியல்**


1. இராகவையங்கார் ரா, பெரும் பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை
2. கோவிந்தனார் கா, (1996) பெரும்பாணாற்றுப்படை - விளக்கவுரை, எழிலகம் வெளியீடு, திருவத்திபுரம் (செய்யாறு)
3. தட்சிணாமூர்த்தி அ, (2008), தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, அண்ணா நகர், சென்னை
4. துரைசாமிப்பிள்ளை.ஔவை (உரை), (2023), புறநானூறு (மூலமும் உரையும்), தீபம் வெளியீடு
5. பூரணச்சந்திரன் க(மொ), (2014), நில அமைப்பும் தமிழ்க் கவிதையும் (செவ்வியல் தமிழ்க் கவிதையில் இயற்கை பற்றியதோர் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.
6. முருகேசபாண்டியன் ந, (2016), மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை
7. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்